**SC.No.90/2020**

**நாள்..** 26.04.2023

**அ.சா. 3 –** உமா

<u>(எதிரி ஆஜர்.)</u>

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

போலிசாரை நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து என் தம்பி ராஜா குத்துப்பட்டு கிடந்த நேரத்தில் மதியம் போல் பார்த்தேன். அப்போது நேரம் பகல் 11.30 முதல் 12.00 மணிக்குள் இருக்கும். அப்போது போலிசார் முதலில் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. போலிசாரை நான் பார்த்தபோது என் தாயார் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். போலிசார் விசாரித்தார்கள், என் தாயார் புகார் வாக்குமூலம் கொடுத்தார். அந்த புகார் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்றால் அங்கு வந்த இரண்டு போலிசாரில் ஒருவர் எழுதினார். அவ்வாறு போலிசார் எழுதிக்கொண்டதில் நான் கையொப்பம் போட்டேனா என்றால் இல்லை. அவ்வாறு போலிசார் எழுதிக்கொண்ட பிறகு என்னை இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்களா என்றால் இல்லை. இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் மதியம் 02.00 மணி வரை இருந்தோம். மதியம் 02.00 மணிக்கு மேல் எந்த வாகனத்தில் மதுரைக்கு சென்றோம் என்றால் அரசு மருத்துவமனை ஆம்புலன்ஸில் சென்றோம். இராமநாதபுரத்திலிருந்து மதுரைக்கு சுமார் 1 1/2 மணி நேரத்தில் சென்றுவிடலாம் என்றால் சரியல்ல. நாங்கள் மாலை 05.00 மணிக்குத்தான் மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்று சேர்ந்தோம் என்றால் சரிதான். அவ்வாறு நாங்கள் மதுரைக்கு சென்றபோது போலிசார் எங்களுடன் வந்தார்களா என்றால் இல்லை. மதுரை அரசு மருத்துவமனையில் வைத்து போலிசார் எங்களை எப்போது பார்த்தார்கள் என்றால் மாலை 05.30 மணிக்கு பார்த்தார்கள். அப்போது போலிசார் என்னை பார்த்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். எனது வாக்குமூலத்தை லேப்டாப்பில் பதிவு செய்து கொண்டார்கள். அவ்வாறு லேப்டாப்பில் பதிவு செய்தவர் யார் என்றால் இரண்டு போலிசார்கள். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் புகார் வாக்குமூலத்தை என் தாயாரிடம் பதிவு செய்த அதே

போலிசார் தான் மதுரை அரசு மருத்துவமனையில் என்னை விசாரித்து லேப்டாப்பில் பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் காலை 11.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை நாங்கள் இருந்தபோது போலிசாரும் மருத்துவமனையில் இருந்தார்கள் என்றால் இல்லை. புகார் வாக்குமூலம் பெற்றுவிட்டு போய்விட்டார்கள். மதுரையில் மருத்துவர் என்ன நடைபெற்றது என்று கேட்டு அதை நாங்கள் தெரிவித்து அதை மருத்துவர் எழுதிக்கொண்டார் என்றால் சரிதான். மதுரை அரசு மருத்துவமனையில் எனது தம்பி 4 நாட்கள் சிகிச்சையில் இருந்தார் என்றால் சரிதான். 4 நாட்களும் நான் மதுரை அரசு மருத்துவமனையில் என் தம்பியுடன் இருந்தேன் என்றால் சரிதான். மதுரை அரசு மருத்துவமனையில் நான் இருந்தபோது என் தம்பி சிகிச்சையில் இருந்த 4 நாட்களில் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. அவர் இறந்த பிறகு போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் என் தம்பி இறந்துவிட்டார் என்று தகவல் தெரிந்து அதன் பிறகு வந்து என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதற்கு இடைப்பட்ட நாட்களில் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என் தம்பி சிகிச்சையில் இருந்தபோது நீதித்துறை நடுவர் ஒருவர் வந்து பார்த்து விசாரித்துவிட்டு சென்றார் என்றால் சரிதான். என் தம்பி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அவரது பிள்ளைகள் வந்து இருந்தார்களா என்றால் இருந்தார்கள். நான் இராமநாதபுரம் அண்ணாநகரில் குடியிருந்தேனா என்றால் என் தம்பி இறக்கும்போது குடியிருந்தேன். எனக்கு திருமணமாகி எனது இரண்டு குழந்தைகளுடன் தனியாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான். என் தம்பி திருமணமாகி தனியாக குடித்தனம் இருந்தார் என்றால் சரிதான். என் தம்பிக்கு திருமணமான பிறகு எனது தாயார் தனியாக குடியிருந்தார் என்றால் சரியல்ல. என் தம்பியுடன் இருந்தார். எனக்கு இரண்டு குழந்தைகள். மூத்த மகனுக்கு 23 வயது. இளைய பெண்ணுக்கு 19 வயது. பொதுவாக குடும்பத்தில் உள்ள நபருக்கு அடிதடியில் இரத்தக்காயம் ஏற்பட்டால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வேண்டும் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். நான் 2வது மனைவியின் மகள் என்றால் சரிதான். என் அப்பாவின் மூத்த மனைவிக்கு எத்தனை பிள்ளைகள் மற்றும் மூத்த மனைவி யார் என்பதும் அவர்களது பெயர்களும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்

அப்பாவின் மூத்த மனைவி மற்றும் பிள்ளைகள் இராமநாதபுரத்தில் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். என் அப்பா பெயரில் வீடு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. என் தம்பி மனைவியின் அம்மா, அப்பா பெயர் தெரியுமா என்றால் அம்மா பெயர் தெரியும், அப்பா பெயர் தெரியாது. என் தம்பி எங்கு, எப்போது திருமணம் செய்து கொண்டார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர் காதல் திருமணம் செய்து கொண்டார். அந்த காதல் திருமணத்தை நானோ, எனது தாயாரோ ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. என் தம்பியின் மனைவி வேறு சாதியை சேர்ந்தவர் என்றால் சரியல்ல. என் தம்பியின் மனைவி தீவைத்து தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரிதான். அவ்வாறு தீவைத்து தற்கொலை செய்து கொண்டபோது என் தம்பியையும், தாயாரையும் போலிசார் காவல் நிலையம் அழைத்துச் சென்றார்கள் என்றால் இல்லை. என் தம்பி மனைவி தற்கொலை செய்து கொண்டது சம்மந்தமாக என் தம்பி மனைவியின் வீட்டார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் இல்லை. என் தம்பி மனைவி தற்கொலை செய்து கொண்டது தொடர்பாக அவரது குடும்பத்தாருடன் பிரச்சனை இருந்தது என்றால் இல்லை. என் தம்பி மனைவி தற்கொலை செய்து கொண்டதற்கு என்ன காரணம் என்றால் அவர்களுக்குள் பிரச்சனை இருந்தது, அவர்கள் தனியாக குடித்தனம் செய்ததால் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. என் தம்பி தனியாக குடித்தனம் செய்தபோது குடும்பத்தை பார்க்காமல் மது அருந்திவிட்டு வருவார் என்பதாலும், மற்றொரு பெண்ணுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்பதும் தான் என் தம்பி மனைவி தற்கொலை செய்து கொள்வதற்கு காரணம் என்றால் இல்லை. என் தம்பி கொத்தனாராக வேலை பார்த்தார் என்றால் சரிதான். நான் இராமநாதபுரம் அண்ணா நகரில் குடியிருந்த இடத்திற்கும் என் தம்பி குடியிருந்த வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 1/2 கிமீ தூரம் இருக்கும். என் தம்பி காதல் திருமணம் செய்து கொண்டதால் அவருடன் மற்றும் அவரது மனைவியுடன் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. என் தம்பி இறப்பதற்கு முன்பு சிறிது நாட்கள் திருப்பூரில் வேலை செய்தார் என்றால் சரிதான். என் தம்பிக்கு மனைவியுடன் மற்றும் மனைவி வீட்டாருடன் பிரச்சனை இருந்ததாலும், என் அப்பாவின் மூத்த மனைவியின் பிள்ளைகள் வீட்டில் பங்குகேட்டு பிரச்சனை இருந்ததாலும் என் தம்பி திருப்பூரில் வேலைக்கு சென்றார் என்றால் இல்லை. நான்

தனியாகவும், என் அம்மா தனியாகவும், என் தம்பி தனியாகவும் குடித்தனம் செய்து வந்தோம் என்றால் நான் தனியாகவும், என் அம்மாவும் தம்பியும் தனியாகவும் குடித்தனம் செய்து வந்தோம். என் தம்பி தனியாக குடியிருந்தார் என்றாலும் தனியாக குடியிருந்த என் தாயாரையும் என் தம்பி கவனிக்கவில்லை என்றாலும் இல்லை. என் தம்பி குத்துப்பட்ட விஷயமாக அவரது மகன் காளீஸ்வரன் தான் முதன் முதலாக தகவல் சொன்னான் என்றால் சரிதான். எனது செல்போனை போலிசார் வாங்கி பார்த்தார்களா என்றால் இல்லை. எனக்கு செல்போன் உள்ளது. தம்பி மகன் எனக்கு போன் செய்த பிறகு நான், என் தம்பி மகன், என் தாயார் ஆகியோர் சேர்ந்து ஆட்டோவில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். என் தம்பி காயம்பட்டு கிடக்கிறார் என்று பொதுமக்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி 108 ஆம்புலன்ஸில் உள்ளவர்கள் என் தம்பியை இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றால் சரியல்ல. இது குறித்து நான் கேள்விப்பட்டேனா என்றால் இல்லை. எதிரி சரவணனை வழக்கு சம்பவத்திற்கு முன்பு எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கிற்கு பின்பு தான் போலிசார் சொல்லி எதிரியைப்பற்றி தெரியும் என்றால் சரிதான். என் தம்பிக்கும், எதிரிக்கும் ஏதோ பிரச்சனை இருந்தது சம்மந்தமாகவும், அதனால் என் தம்பி திருப்பூருக்கு சென்றார் என்பதும் திருப்பூரில் 3 மாதங்கள் இருந்தார் என்பதும், அதன் பிறகு என் தம்பி ஊருக்கு வந்திருந்தது சம்மந்தமாகவும் என் தாயார் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றாலும் நேரில் தெரியாது என்றாலும் சரிதான். என் தம்பி ஊருக்கு வந்த பிறகு காலை 07.30 மணிக்கு வேலைக்கு கிளம்பிச் சென்றார் என்பது என் தாயார் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். என் தம்பிக்கும், எதிரிக்கும் சம்பவத்திற்கு 3 மாதங்களுக்கு முன்பு ஏற்பட்ட பிரச்சனை தொடர்பாக நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்து விசாரிக்கவோ, காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவோ செய்தேனா என்றால் இல்லை. அதற்கு எந்த நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் சரிதான். என் தம்பி திருப்பூரில் யாரிடம், எந்த இடத்தில், என்ன வேலை பார்த்தார் என்றால் என் தம்பி திருப்பூரில் கொத்தனார் வேலை பார்த்ததாக சொன்னார், மற்ற விவரங்கள் தெரியாது. போலிசார் விசாரணையில் என் தம்பியை காலை 10.30 மணியளவில் குத்துப்பட்டு கிடப்பதாக என் தம்பியின் மகன் காளீஸ்வரன் என்பவருக்கு ரவிந்திரன் என்பவர் போன் மூலம் சொன்னார் என்ற

விஷயத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சொல்லியிருக்கிறேன். எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றாலும் எனக்கும் என் தம்பிக்கும் பேச்சுவார்த்தை கிடையாது என்றாலும், என் தம்பி இறந்த பிறகு சாட்சி வேண்டும் என்பதற்காக என்னை சாட்சியாக போட்டு போலிசார் சொல்லிக்கொடுத்ததன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தம்பி காதல் திருமணம் செய்துகொண்டு 2 பிள்ளைகள் பிறந்த பிறகும் அவரது மனைவியை சரியாக வாழவைக்காமல் அவரது மனைவி தற்கொலை செய்து கொண்டதால் அவரது மனைவி வீட்டாருடன் பிரச்சனை இருந்து வந்தது என்றாலும், என் அப்பாவின் மூத்த மனைவியின் பிள்ளைகள் சொத்துகேட்டபோது என் தம்பி அந்த பிரச்சனையில் ஈடுபாடு காட்டியதால் அவர்களுடனும் விரோதம் இருந்து வந்தது என்றாலும் அந்த விரோதம் காரணமாக என் தம்பிக்கு எங்கோ வைத்து வேறுயாராலோ காயம் ஏற்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எதிரியை இவ்வழக்கில் போலிசார் பொய்யாக சேர்த்துள்ளார்கள் என்றாலும் அந்த பொய் வழக்கிற்கேற்ப நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தம்பி நல்ல ஆரோக்கியமான, தாட்டியமான ஆள் என்றால் சரிதான். என் தம்பி மது அருந்திவிட்டு தகராறு செய்வார் என்றால் சரியல்ல. என் தம்பி சம்பவ தினத்தன்று மது அருந்தி இருந்தார் என்றால் சரியல்ல. என் தம்பி சம்பவ தினத்தன்று மது அருந்திவிட்டு யாருடனோ தகராறு செய்து காயப்பட்டுகிடந்தார் என்றாலும் அதைப்பார்த்த பொதுமக்கள் தான் மருத்துவமனையில் 108 ஆம்புலன்ஸ் மூலமாக சேர்த்தார்கள் என்றாலும் அது எனக்கு நன்றாக தெரியும் என்றாலும் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

என்னால் தட்டெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டெழுத்து செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.